செய்திப் பணிப்பாளர்/ செய்திப் பதிப்பாசிரியர் பெப்ரவரி 21, 2017

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) ; ஜனவரி 2017

## தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

## தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அறிக்கை வெளியிடுகையில், தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. அமர சத்தரசிங்ஹ அவர்கள், 2017 ஜனவரி இற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருடம் பணவீக்கம், 2016 டிசம்பர் இல் இருந்த 4,2% இலிருந்து 6.5% ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவித்தார். பணவீக்க அதிகரிப்பிற்கான காரணம், 2016 ஜனவரியில் ஒப்பீட்டளவில் குறைந்த விலை மட்டங்கள் நிலவியமையாகும். 2016 ஜனவரியில் உணவுப் பிரிவிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்பு -1.9% ஆகவும் உணவல்லாப் பிரிவிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்பு 1.2% ஆகவும் இருந்தது. எனினும் 2017 ஜனவரி இல், உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்பு முறையே 2.9%, 3.6% ஆக காணப்பட்டன.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், 2017 ஜனவரி இற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை வெளியிட்டுள்ளது. 2017 ஜனவரி இற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 119.3 என கணிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த மாத (டிசம்பர்) சுட்டெண்ணான 118.0 உடன் ஒப்பிடுகையில் 1.3 சுட்டெண் புள்ளி அல்லது 1.1 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. இது உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.78% அதிகரிப்பினாலும் மற்றும் உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.35% அதிகரிப்பினாலும் ஏற்பட்டதாகும்.

டிசம்பர் 2016 உடன் ஒப்பிடுகையில் 2017 ஜனவரி இற்கான உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி அதிகரிப்பிற்கான காரணம், அரிசி, தேங்காய், வாழைப்பழம், தேங்காய் எண்ணெய், பச்சை மிளகாய், சீனி, உடன் மீன், பப்பாசி, கருவாடு, உருளைக்கிழங்கு, வெள்ளைப்பூடு என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பேயாகும். எனினும் மரக்கறி, தேசிக்காய், கோழி இறைச்சி, முட்டை, பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், மாம்பழம், செத்தல் மிளகாய் என்பவற்றின் விலைகளில் வீழ்ச்சி காணப்பட்டது.

முந்தைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2017 ஜனவரி இற்கான உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி அதிகரிப்பிற்கான காரணம், 'நானாவிதப் பொருட்கள், சேவைகள்', போக்குவரத்து', 'உணவு விடுதியும் ஹோட்டல்களும்', ''கேளிக்கை மற்றும் கலாச்சாரம்', 'கல்வி', 'உடையும் காலணியும்' என்பவற்றில் ஏற்பட்ட செலவுப் பெறுமதி அதிகரிப்பாகும். எனினும் 'மது பானங்கள், புகையிலை மற்றும் போதைவஸ்து', 'வீடு, நீர், மின், எரிவாயு, ஏனைய எரிபொருள்' என்பவற்றின் செலவுப்பெறுமதியில் வீழ்ச்சி காணப்பட்டது. மேலும் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் 'தளபாடம், குடித்தன உபகரணம், வழமையான குடித்தனப் பராமரிப்பு' பிரிவின் செலவுப் பெறுமதியில் மிகச்சிறிதளவு அதிகரிப்புக் காணப்பட்டது. 'சுகாதாரம்', 'தொடர்பாடல்' பிரிவுகளுக்கான செலவுப் பெறுமதியில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | வருடத்தின்மீது வருடம் பணவீக்க% |
|---|---|---|---|---|
| 2016 | ஜனவரி | 112.0 | -1.1 | -0.7 |
| | பெப்ரவரி | 110.8 | -1.1 | 1.7 |
| | மார்ச் | 110.0 | -0.7 | 2.2 |
| | ஏப்ரல் | 111.6 | 1.5 | 4.3 |
| | மே | 113.7 | 1.9 | 5.3 |
| | யூன் | 116.1 | 2.1 | 6.4 |
| | யூலை | 115.2 | -0.8 | 5.8 |
| | ஓகஸ்ட் | 113.3 | -1.6 | 4.5 |
| | செப்ரெம்பர் | 113.5 | 0.2 | 4.7 |
| | **ஒக்ரோபர்** | 114.7 | 1.1 | 5.0 |
| | நவம்பர் | 116.6 | 1.7 | 4.1 |
| | டிசம்பர் | 118.0 | 1.2 | 4.2 |
| 2017 | ஜனவரி | 119.3 | 1.1 | 6.5 |


தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

தொ. இல.: 011-2147001 / 011-2147020